பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

10 10 2024 7 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆசியான் உச்சி மாநாடு மற்றும் கிழக்காசிய உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இன்று லாவோஸ் புறப்பட்டுச் செல்கிறார்.
2. தொழிலதிபர் ரத்தன் டாடா மறைவுக்கு குடியரசுத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.
3. திரைப்படத் துறையின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.
4. ராணுவ உயர் அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு சிக்கிமில் இன்று தொடங்குகிறது.
5. பங்களாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திர மோடி, ஆசியான் உச்சி மாநாடு மற்றும் கிழக்காசிய உச்சி மாநாட்டில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் பயணமாக இன்று லாவோஸ் புறப்பட்டுச் செல்கிறார்.

தென்கிழக்கு ஆசிய கூட்டமைப்பான ஆசியானுக்கு இந்த ஆண்டு லாவோஸ் தலைமை வகிக்கிறது.

இதன் மாநாடு இன்றும் நாளையும் அங்கு நடைபெறுகிறது.

இதேபோல் 19-வது கிழக்காசிய உச்சி மாநாடு லாவோசின் லியாண்டின் நகரில் நடைபெறுகிறது.

இதில் பங்கேற்பதற்காக அந்நாட்டுக்கு பயணம் மேற்கொள்ளும் பிரதமர் திரு நரேந்திரமோடி பல்வேறு நாடுகளின் தலைவர்களுடன் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

**[]<<<>>>[]**

திரைப்படத் துறையின் மேம்பாட்டுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து செயல்படுவதாக தகவல் ஒலிபரப்புத் துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதியுள்ள சிறப்பு கட்டுரையில், இந்திய திரைப்படங்கள் தற்போது மொழி மற்றும் கலாச்சார வேறுபாடுகளை கடந்து உலக அளவில் புகழ்பெற்று வருவதாகக் கூறியுள்ளார்.

ஒரே பாரதம் - உன்னத பாரதம் என்ற உணர்வுடன் இந்திய திரைப்படங்கள் நாட்டு மக்களை ஒருங்கிணைத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

படைப்பாளிகளை ஊக்குவிப்பது, திரைப்பட கட்டமைப்புகளை மேம்படுத்துதல், திரைப்பட தயாரிப்புக்கான நடைமுறைகளை எளிதாக்குதல் ஆகிய மூன்று முக்கிய அம்சங்களில் அரசு கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக எல்லைகளைக் கடந்து இந்திய திரைப்படங்கள் சாதனை படைத்து வருவதாக திரு அஸ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

பிரபல தொழிலதிபரும், டாடா குழுமத்தின் முன்னாள் தலைவருமான திரு ரத்தன் டாடா உடல்நலக்குறைவால் மும்பையில் நேற்று இரவு காலமானார். அவருக்கு வயது 86.

கடந்த சில நாட்களாக வயது மூப்பு காரணமாக ஏற்பட்ட உடல்நலக்குறைவால் மும்பையில் தனியார் மருத்துவமனையில் அவர் சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சை பலனின்றி நேற்று இரவு ரத்தன் டாடா காலமானதாக டாடா குழுமத்தின் தலைவர் திரு சந்திரசேகர் தெரிவித்தார்.

1937-ஆம் ஆண்டு மும்பையில் பிறந்த அவர், 1991-ஆம் ஆண்டு முதல் 2012-ஆம் ஆண்டு வரை டாடா குழுமத்தின் தலைவராக பொறுப்பு வகித்தார்.

நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் 30-க்கும் கூடுதலான டாடா நிறுவனங்களை அவர் நிர்வகித்து வந்தார்.

டாடா அறக்கட்டளை மூலம் கல்வி, அறக்கட்டளை, மருத்துவம், மக்களின் வாழ்வாதார முன்னேற்றம், கலை கலாச்சார மேம்பாடு உள்ளிட்ட சமூக பணிகளையும் அவர் மேற்கொண்டார்.

தமது நிறுவனத்தின் லாபத்தில் 66 சதவீதத்தை அறக்கட்டளையின் சமூக பணிகளுக்கு பயன்படுத்த அவர் வகை செய்தார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய ரத்தன் டாடா முக்கிய பங்காற்றியதுடன், ஏராளமான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளார்.

அவரது பங்களிப்புகளை பாராட்டி மத்திய அரசு இரண்டாயிரமாவது ஆண்டு பத்மபூசன் விருதையும், 2008-ஆம் ஆண்டு பத்ம விபூஷன் விருதையும் அவருக்கு வழங்கி கௌரவித்தது.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு தலைவர்கள் பலர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு விடுத்துள்ள இரங்கல் செய்தியில், தொழில் வளர்ச்சியுடன், தேச கட்டமைப்புக்கும் பாடுபட்டவர் ரத்தன் டாடா என புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய தொழில்துறைக்கு மிகப்பெரிய பங்காற்றியதுடன், சுயசார்பு இந்தியாவை கட்டமைக்க பாடுபட்டவர் ரத்தன் டாடா என்று குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில், தொலைநோக்கு பார்வைகொண்ட தொழிலதிபராக ரத்தன் டாடா திகழ்ந்ததுடன், அளப்பறிய சமூக பணிகளையும் ஆற்றியுள்ளதாகக் கூறியுள்ளார்.

நாட்டில் கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றின் மேம்பாட்டுக்காக அளப்பறிய பணிகளை மேற்கொண்டவர் டாடா என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.,

நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு ரத்தன் டாடா ஆற்றிய பங்களிப்புக்காக அவர் என்றென்றும் நினைவுக்கூரப்படுவார் என பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் கூறியுள்ளார்.

தேச வளர்ச்சிக்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் ரத்தன் டாடா என்று உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மகாராஷ்டிரா முதலமைச்சர் திரு ஏக்நாத்ஷிண்டே ரத்தன் டாடாவின் குடும்பத்தினருக்கு நேரில் சென்று ஆறுதல் தெரிவித்தார்.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மகாராஷ்டிராவில் இன்று ஒருநாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்றும், அரசு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படும் என்று அம்மாநில அரசு தெரித்துள்ளது.

ரத்தன் டாடாவின் இறுதி சடங்குகள் முழு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்றும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது.

ரத்தன் டாடாவின் மறைவுக்கு பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்களும், தொழில் துறையினரும் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

ராணுவ உயர் அதிகாரிகளின் இரண்டு நாள் மாநாடு சிக்கிமில் இன்று தொடங்குகிறது.

அம்மாநில தலைநகர் கேங்க்டாக்கில் நடைபெறும் இந்த மாநாட்டில் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

எல்லைகளை பாதுகாப்பது மற்றும் சவால்களை எதிர்கொள்வது குறித்து இந்த மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

**[]<<<>>>[]**

தேயிலை வளர்ச்சிக்கு நடப்பு ஆண்டில் 668 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தேசிய தேயிலை வாரியத்தின் செயல் இயக்குநர் திரு முத்துக்குமார் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் குன்னூரில் நடைபெற்ற தென்னிந்திய தேயிலை வாரிய கூட்டத்திற்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிதியில் 20 சதவீதம் தென் மாநிலங்களுக்கு கிடைக்கும் என்றார்.

தேயிலை தொடர்பாக செயல்படும் 15 உறுப்பினர்களைக் கொண்ட சுய உதவி குழுக்களுக்கு மானியம் வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

சிறு தேயிலை விவசாயிகளை ஊக்குவிக்க நிதி உதவி வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

தேயிலை ஏற்றுமதியை 400 மில்லியன் கிலோவாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு முத்துக்குமார் கூறினார்.

**[]<<<>>>[]**

தேசிய அஞ்சல் வாரவிழா இம்மாதம் ஏழாம் தேதி தொடங்கி 11-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

அஞ்சல் வாரத்தையொட்டி நாடு முழுவதும் அஞ்சல் தலை கண்காட்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதனையொட்டி அஞ்சல் சேவைகள் குறித்து பள்ளி மாணவ மாணவிகளுக்கு எடுத்துரைக்கும் நிகழ்ச்சி தமிழகத்தின் காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்றது.

அஞ்சல் துறை மக்களுக்கான சேவைகளை சிறப்பாக வழங்கி வருகிறது என்று காஞ்சிபுரம் அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர் திரு அருண்தாஸ் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - அருண்தாஸ் ) -48--- செகண்ட்*

**[]<<<>>>[]**

உலக மனநல தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மனநலம் தொடர்பான பிரச்சினைகளை களைவதற்கும், அது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் பத்தாம் தேதி உலக மனநல தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

பணியில் மனநலன் என்ற கருப்பொருளில் இந்த ஆண்டு இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி பல்வேறு விழிப்புணர்வு நிழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

உலக கண் பார்வை தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

கண்களையும், கண் பார்வையையும் பாதுகாப்பது தொடர்பாகவும், பார்வையிழப்பை தடுப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்த தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் இரண்டாவது வியாழக்கிழமை கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

இந்நாளையொட்டி நாட்டின் பல பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

[]<<<>>>[]

பங்ளாதேஷ் அணிக்கு எதிரான இரண்டாவது டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 86 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 221 ரன் எடுத்தது.

222 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பங்ளாதேஷ் ஒன்பது விக்கெட் இழப்புக்கு 135 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இதையடுத்து மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று தொடரை கைப்பற்றியது.

மூன்றாவது மற்றும் இறுதிப்போட்டி நாளை மறுநாள் ஹைதராபாத்தில் நடைபெறுகிறது.

[]<<<>>>[]

தேசிய ஜூனியர் மகளிர் ஹாக்கிப் போட்டியில் மத்திய பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் அணிகள் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றுள்ளன.

ராஞ்சியில் நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் மத்திய பிரதேசம் - ஒடிசா அணியை ஐந்து – நான்கு என்ற கோல் கணக்கில் வென்றது.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் ஜார்க்கண்ட் இரண்டு – ஒன்று என்ற கோல் கணக்கில் ஹரியானா அணியை வென்றது.

***End of News***